# மின்னியல் ஆவணமாகிறது தமிழ்ப் புழக்கம்

ஐஸ்வர்யா சுப்பிரமணியன்

மொழி நிலைத்திருக்க கல்வெட்டுகளில் செதுக்கிய காலம் மாறி எதிர்காலச் சந்ததியினரும் தற்போதைய மொழி நடையைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது புதிய முயற்சி ஒன்று.

சிங்கப்பூரில் பொது இடங்களில் தமிழில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகள், வழிகாட்டிகள் போன்றவற்றைப் புகைப்படம் எடுத்துச் சேகரித்துள்ளது 10 பேர் உள்ளடக்கிய குழு.

கடந்த ஆண்டு முழுவதும் கிட்டத்தட்ட 500 பதிவுகள் 'சிங்கப்பூர் தமிழ் 2015' என்ற முயற்சியின்கீழ் சேகரிக்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூரில் தமிழ்மொழியின் பயன்பாட்டைப் பொதுப் பதிவேட்டில் ஆவணப்படுத்துகிறது சிங்கப்பூர் மின் மரபுடைமைக் குழுவின் இந்த முயற்சி.

"இந்தப் பணிக்கு 2015ஆம் ஆண்டு வெறும் தொடக்கப்புள்ளி தான். ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு முறை தொடரவிருக்கும் நெடுங்காலத் திட்டம் இது. இதன் வழியாக, காலப்போக்கில் சிங்கப்பூரில் தமிழ் எவ்வாறு பரிணமித்துள்ளது என்பது புலப்படும்" என்றார் இத்திட்டத்தின் ஆலோசகர், திரு அருண் மகிழ்நன்.

சென்ற ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கிய இந்தத் திட்டத்துக்கு திரு அருண் மகிழ்நன், திரு நாராயணன் ஆண்டியப்பன் ஆகியோர் ஆலோசகர்களாகப் பொறுப்பேற்றுள்ளனர்.

திரு ராமகிருஷ்ணன் கார்த்திகேயன், நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்கள், தமிழ் மீது ஆர்வம் கொண்டுள்ள தனிப்பட்ட இளையர்கள் ஆகியோர் இந்தத் திட்டத்தின் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இது சிங்கப்பூரின் பொதுத்தளங்களில் தமிழ் எங்கெல்லாம் புழங்கப்படுகிறது என்பதை மக்களுக்குத் துல்லியமாகக் காட்ட முனைகிறது.

"பள்ளிகளில் மாணவர்களுக்கு ஒரு கற்றல் கருவியாக இந்தத் திட்டத்தை எடுத்துச் செல்லவுள்ளோம். தினசரி வாழ்வில் தமிழின் பயன்பாட்டை எளிமையாக அவர்களுக்கு எடுத்துரைக்க நாங்கள் விழைகிறோம். மொழி பெயர்ப்பாளர்களுக்கும் இத்தளம் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்," என்றார் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு ராமகிருஷ்ணன் கார்த்திகேயன், 32.

இவர்களது குழுவில் தமிழர்கள் மட்டுமின்றி கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டவர்களும் அடங்குவர்.

இந்த முயற்சிக்கான சின்னத்தை உருவாக்கியவர் ஒரு சீனர். இவ்வாறு இனங்களைத் தாண்டி, மொழிகளின் வேற்றுமைகளைத் தகர்த்தெரிந்து தமிழைப் பாதுகாக்கும் ஒருமித்த முயற்சி தான் இது.

"பல தருணங்களில் பொதுவிடங்களில் தமிழ் புழக்கத்தில் இருந்தாலும் அவற்றை நாம் கவனிக்கத் தவறி விடுகிறோம். இந்த முயற்சியின் மூலம் தமிழ் எங்கெல்லாம் மதிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் போது மனதில் திருப்தியும் மகிழ்ச்சியும் பிறக்கிறது," என்று தம்முடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார் தேசியப் பல்கலைக்கழக மாணவி சர்மிலி செல்வராஜி, 20.

இந்த முயற்சிக்கு பொதுமக்களின் ஆதரவும் ஓரளவுக்கு இருந்தது எனக் கூறியதுடன், ''பொதுமக்கள் எளிதாக இணையப்பக்கத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் தளம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் பங்களிப்பு அதிகரிக்க, இதனால் அவர்கள் அடையும் பயனும் கூடும்,'' என்றார் இணையப்பக்கத்தை உருவாக்குவதில் பெரிதும் உதவிபுரிந்த திரு நாராயணன் ஆண்டியப்பன், 43.

"உயர்நிலைப் பள்ளிக்குப் பின் நிறைய இளையர்களுக்குத் தமிழ் கற்க வாய்ப்பு இருக்காது. எனவே இதுபோன்ற முயற்சிகளில் பங்கெடுத்து தமிழுக்குத் தங்களால் முடிந்த சேவையை இளையர்கள் செய்யலாம்,'' என்றார் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் திரு செம்பியன் சோமசுந்தரம், 23.

"மொழிபெயர்ப்புக்கு உதவக்கூடிய தளங்கள் சிங்கப்பூரில் போதுமானதாக இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்தின் பெயரைச் சரியாகத் தமிழில் அறிந்துகொள்ள இந்த முயற்சி உதவும்," என தமிழ்ப் புழக்கத்தை ஆவணப்படுத்தும் திட்டத்தின் பலனை மேலும் விளக்கினார் தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு மு. ஹரிகிருஷ்ணன், 67.




சிங்கப்பூரின் பொது இடங்களில் தற்போது புழக்கத்தில் இருக்கும் தமிழ் அறிவிப்புகள், வழிகாட்டிகள், இடங்களின் பெயர்கள் போன்றவற்றை ஆவணப்படுத்த கைகோத்திருக்கும் குழுவினர். **படம்: திமத்தி டேவிட்**

> "தொழில்நுட்ப வளர்ச்சி பல்கிப் பெருகிக்கொண்டிருக்கும் சிங்கப்பூரில் புத்தகங்கள், வீட்டுப்பாடங்கள் போன்ற அனைத்தும் மின்னலக்கமாகிறது. இந்தச் சூழலில், தொழில்நுட்பம் வழியாகத் தமிழை ஆவணப்படுத்துதல் வரவேற்கத்தக்கது. இந்த இணையப்பக்கதைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பல பயிற்சிகளைக் கொடுக்கலாம்.
>
> **தமிழாசிரியர் வீரமுத்து கணேசன், ஆண்டர்சன் தொடக்கக்கல்லூரி**

## திட்டத்தின் மூன்று கட்ட செயலாக்கம்

பொதுத் தளங்களில் தமிழ்ப் புழக்கத்தை ஆவணப்படுத்தும் முயற்சி மூன்று கட்டங்களில் செயலாக்கம் காண்கிறது:

▶ **மக்களிடையே திட்டத்தை அறிமுகப்படுத்துதல், பதிவுகளைச் சேகரித்தல் (செப்டம்பர் 2015 – டிசம்பர் 2015)**

முதல் கட்டமாக மக்களிடையே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வரிசையில் 'ஃபேஸ்புக்'கில் singaporetamil2015 என்ற பெயரில் பக்கம் உருவாக்கப்பட்டு, ஆர்வமுள்ளோர் இக்குழுவில் சேர வாய்ப்பு வழங்கப்பட்டது.

சிங்கப்பூரில் பொது இடங்களில் எங்கெல்லாம் தமிழ் உபயோகப்படுத்தப்படுகிறதோ அவற்றை எல்லாம் புகைப்படம் எடுத்து www.singaporetamil2015.sg என்ற இணையத்தளத்தில் குழு உறுப்பினர்கள் பதிவேற்றம் செய்ய ஆரம்பித்தனர். தெருப்பெயர்கள், பெருவிரைவு ரயில் நிலையங்களின் பெயர்கள், சஞ்சிகைகள், அறிவிப்புகள், வழிகாட்டிகள் என்று எந்த இடத்தையும் விட்டுவைக்கவில்லை குழு உறுப்பினர்கள்.

பொதுமக்களும் இந்த இணையத் தளத்தில் படங்களைப் பதிவேற்ற வசதிகள் உண்டு.

▶ **தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவுகளுக்குச் சிறிய குறிப்புரை எழுதுதல் (ஜனவரி 2016 – பிப்ரவரி 2016)**

அடுத்தக்கட்ட முயற்சியாக சேகரிக்கப்பட்டுள்ள பதிவுகளில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குச் சிறிய குறிப்புரை எழுதும் பணியில் தற்போது குழு இறங்கியுள்ளது.

கலைகள், சுற்றுப்பயணத் தளங்கள், இணையம், உணவு போன்ற இருபதுக்கும் அதிகமான பிரிவுகளாக புகைப்படங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

▶ **பள்ளிகளுக்கும் மாணவர்களுக்கும் இத்திட்டத்தை கொண்டு சேர்ப்பது (ஏப்ரல் 2016 முதல்)**

மார்ச் மாத இறுதி வரை இந்த இணையப்பக்கம் சோதனைக்கு விடப்பட்டு, பிறகு அதிகாரபூர்வமாக ஏப்ரல் மாதத்தில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு விடப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இணையப்பக்கத்தை மாணவர்கள் எந்தெந்த வழிகளில் பயன்படுத்தலாம் என்பதை ஆசிரியர்களுக்கு எடுத்துரைக்க பயிலரங்குகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும். இணையப்பக்கத்தைச் சார்ந்து தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கக்கல்லூரி ஆகிய அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் குறிப்பிட்ட பயிற்சிப் பாடங்கள் உருவாக்கப்படவுள்ளன.


## இளையர் முரசுடன் இணையுங்கள்; பரிசை வெல்லுங்கள்

**'ஃபேஸ்புக்', 'டுவிட்டர்', 'இன்ஸ்டகிராம்', மின்னஞ்சல் வழியாக இளையர் முரசோடு இணையுங்கள். அதிக ஈடுபாட்டுடன் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் ஒருவருக்கு வாரந்தோறும் இரண்டு சினிமா நுழைவுச் சீட்டுகள் பரிசாக வழங்கப்படும்.**

Ilayar Murasu
ilayarmurasu
ilayar_murasu
TM_IM@sph.com.sg